யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2016

## Term Examination, March - 2016

FWC

| தரம் :- 13 (2016) | பொருளியல் – I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

சுட்டெண் :........................................

தவனிக்குக:-
* எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.
* 01 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
* மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது சுட்டெண்ணைத் தெளிவாக எழுதுக.

01) ஒரு பொருளாதாரத்தில் குடும்பம் மற்றும் உற்பத்தி அமைப்புக்கள் வெவ்வேறாகவே தீர்மானம் எடுக்கின்றன. இவ்வாறாக வெவ்வேறாக எடுக்கப்படுகின்ற தீர்மானம் தொடர்பில் கற்கை செய்கின்ற பொருளியல் விடத்துறை எது?
(1) பேரண்டப் பொருளியல்
(2) நடைமுறைப் பொருளியல்
(3) நுண்பாகப் பொருளியல்
(4) மனைப் பொருளியல்
(5) நேர்ப் பொருளியல் (..........)

02) பின்வருவனவற்றுள் நேர்க்கணிய நிலைக்கூற்று எது?
(1) அரச ஊழியர்களின் ஓய்வுபெறும் வயதெல்லையை 65 ஆக உயர்த்த வேண்டும்.
(2) சமமற்ற வளப்பகிர்வு நியாயமற்றதாகும்.
(3) இலங்கை தனது பொருளாதார வளர்ச்சியை அடுத்த ஐந்து வருடங்களுக்குள் 8 – 10 வீதம் வரை பேணுதல் வேண்டும்.
(4) அரசாங்கம் சமூக நலன்புரிச் சேவைகளிலான செலவீட்டைக் குறைக்க வேண்டும்.
(5) சமூக நலன்புரிச் சேவைகள் மீதான செலவுகள் அரசாங்கமொன்றின் செலவீட்டிற் கணிசமானதோர் இடத்தை எடுத்துக் கொள்கின்றன. (..........)

agaram.lk

03) பின்வருவனவற்றுள் பொருளாதாரப் பண்டமொன்றின் பண்புகளைக் காட்டும் சரியான விடையினைத் தெரிவு செய்க.
A - அருமையான வளங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படுவது.
B - சந்தர்ப்பக்கிரயம் நேர்ப்பெறுமதி கொள்ளும்
C - நுகர்வோர் செலவொன்றை ஏற்க நேரிடல்
D - குறைந்து செல்லும் எல்லைச் செலவொன்று காணப்படுதல்

(1) A மற்றும் B (2) B மற்றும் C (3) C மற்றும் D
(4) A, B மற்றும் C (5) B, C மற்றும் D (..........)

04) சந்தைப் பொருளாதார முறை தொடர்பான விமர்சனங்களில் ஒன்று பின்வருவனவற்றுள் எது?
(1) மிகச்சிறந்த தீர்மானங்களை மேற்கொள்வதற்கான மிகச் சிறந்த தகவல்களை திரட்டிக் கொள்வதற்கான சிக்கல் நிலை காணப்படல்.
(2) ஒழுங்கமைப்பு மற்றும் தொடர்புபடுத்தல் போன்ற பிரச்சனைகள் ஏற்படல்.
(3) இயக்கிகள் இல்லாமையின் காரணமாக நெகிழ்ச்சியற்ற சூழ்நிலை காணப்படுதல்.
(4) வெளிவாரி விளைவுகள் காணப்படும் பண்டங்கள் தொடர்பில் வினைத்திறனற்ற வள ஒதுக்கீடு இடம்பெறல்.
(5) ஏகாதிபத்திய அதிகாரம் காரணமாக வினைத்திறனற்ற சூழ்நிலை உருவாதல். (..........)



Scanned with CamScanner

05) சந்தைப் பொருளாதாரமொன்றில் வள ஒதுக்கீட்டுப் பிரச்சனைக்கான தீர்வு மேற்கொள்ளப்படுவது
(1) காரணி விலைகளின் அடிப்படையிலாகும்.
(2) பொருட்களின் விலைகளின் அடிப்படையிலாகும்.
(3) அரசாங்கத்தினாலாகும்.
(4) உற்பத்தியாளர்களால் ஆகும்.
(5) காரணி விலை மற்றும் பொருட்களின் விலைகளின் அடிப்படையிலாகும். (........)

06) உற்பத்தி சாத்திய எல்லையினுள் அமைந்துள்ள புள்ளியின் மூலம் சுட்டிக்காட்டப்படுவது
(1) வளங்கள் முழுமையாகவே உற்பத்தியின் பொருட்டு பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதாகும்.
(2) மேலும் பயன்படுத்தப்படாதுள்ள ஒரு தொகை வளங்கள் காணப்படுகின்றன என்பதாகும்.
(3) அமையச் செலவு பற்றிய கருத்தாகும்.
(4) குறித்த புள்ளி உற்பத்தி வினைத்திறனைக் கொண்டதாகும்.
(5) மேற்படி சந்தர்ப்பம் உற்பத்தி சாத்திய வளைகோட்டின் மீது அமைந்துள்ள புள்ளியை விட சிறந்ததென்பதாகும். (........)

07) பொருளாதார வினைத்திறனுடன் தொடர்புபடாத கூற்று பின்வருவனவற்றுள் எது?
(1) ஏதேனும் ஒரு பொருள்கள் சேவைகளின் சேர்கையினை மிகவும் குறைந்த செலவில் உற்பத்தி செய்தல்.
(2) நிறை தொழில்மட்டம், பூரண வெளியீட்டு மட்டம் காணப்படுதல்.
(3) ஒவ்வொரு பொருளையும் உற்பத்தி செய்வதில் ஏற்படும் எல்லைச் செலவு அப்பொருளின் விலைக்கு சமப்படல்.
(4) விருப்பம் மற்றும் ஆற்றலுடைய நபர்களினால் பொருட்களும் சேவைகளும் உற்பத்தி செய்யப்படுதல்.
(5) சமூகத்தால் அதிகம் விரும்பப்படும் பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்யும் பொருட்டு வளங்களை ஒதுக்கீடு செய்தல். (........)

08) உள்ளூர் பால்மாவுக்கான கேள்விச் சமன்பாடு $Qd = 1200 - 2P$ ஆகும். உள்ளூர் பால்மாவுக்கான நிரம்பல் சமன்பாடு $Qs = 2P$ ஆகும். இவ் உற்பத்தியாளர்களுக்கு அரசு ரூபா 10 இனை அலகு மானியமாக வழங்கின் பால்மாவுக்கான புதியவிலை என்ன?
(1) ரூபா 295
(2) ரூபா 300
(3) ரூபா 305
(4) ரூபா 310
(5) ரூபா 420 (........)

09) பின்வருவனவற்றுள் தவறான கூற்று எது?
(1) கேள்வி நெகிழ்ச்சியற்றதாக இருக்குமாயின் விலையும் மொத்த வருமானமும் ஒரே திசையில் அசைந்து செல்லும்.
(2) கேள்வி நெகிழ்ச்சியுடையதாக விளங்குமாயின் விலையும் மொத்த வருமானமும் எதிர்த்திசையில் அசைந்து செல்லும்.
(3) கேள்வி அலகு நெகிழ்ச்சி கொண்டதாக காணப்படுமாயின் விலை மாறுகின்ற போது மொத்த வருமானம் எதுவித மாற்றத்திற்கும் உட்படாது.
(4) நேர்கோட்டு வடிவிலான ஒரு கேள்விக்கோடு மாறாத சரிவு கொண்டதாகும். எனவே நெகிழ்ச்சி மாற்றமடையாது.
(5) நெகிழ்ச்சியற்ற கேள்வி நிலவும் போது விலையில் உண்டாகும் ஓர் அதிகரிப்பு கேள்வித் தொகையின் மீது விகிதாசார ரீதியில் குறைவானதொரு வீழ்ச்சியையே கொண்டு வரும். (........)


agaram.lk
Scanned with CamScanner


10) பின்வரும் அட்டவணை நுகர்வோர் வருமானம் மற்றும் கேள்வித் தொகையைக் காட்டுகின்றது.

| நுகர்வோர் வருமானம் | கேள்வித்தொகை |
|---|---|
| 2000 ரூ | 15 அலகு |
| 4000 ரூ | 20 அலகு |
| 6000 ரூ | 25 அலகு |

அட்டவணையில் குறிப்பிடப்படும் பொருள் பின்வருவனவற்றுள் எதுவாக இருக்கலாம்?

(1) கிபன் பொருள்
(2) இழிவுப் பொருள்
(3) அத்தியாவசியப் பொருள்
(4) பொதுப் பொருள்
(5) ஆடம்பரப் பொருள் (.........)

11) கீழே தரப்பட்டுள்ள வரைபடம் அலகுவரியொன்று விதிக்கப்படுவதனால் ஏற்படக்கூடிய விளைவுகளைக் காட்டுகின்றது.




அலகு வரி மற்றும் அலகு வரியின் காரணமாக ஏற்படும் மிகையான வரிச்சுமை என்பன முறையே பின்வருவனவற்றுள் எது?

(1) ரூபா 10, ரூபா 1000 (2) ரூபா 10, ரூபா 500 (3) ரூபா 20, ரூபா 500
(4) ரூபா 10, ரூபா 2000 (5) ரூபா 20, ரூபா 1000 (.........)

agaram.lk

12) போட்டிச் சந்தையொன்றில் விற்கப்படும் பொருளொன்றின் கேள்விச் சமன்பாடு $Qd = 100 - 2P$ ஆகவும் நிரம்பல் சமன்பாடு $Qs = 30 + 3P$ ஆகவும் உள்ளது. 10 ரூபா விலையில் மிகைக்கேள்வி அளவும் ரூபா 15 விலையில் மிகை நிரம்பல் அளவும் யாது?

| | மி.கே | மி.நி |
|---|---|---|
| (1) | 20 | 5 |
| (2) | 80 | 10 |
| (3) | 10 | 80 |
| (4) | 5 | 20 |
| (5) | 10 | 15 |

(.........)


13) பின்வருவனவற்றுள் பொருத்தமற்றது

(1) எல்லை உற்பத்தி பூச்சியமாகவுள்ள போது மொத்த உற்பத்தி அதன் உச்சநிலையில் காணப்படும்.
(2) சராசரி உற்பத்தியை விட எல்லை உற்பத்தி அதிகமாக உள்ளபோது சராசரி உற்பத்தி அதிகரிக்கும் போக்குடையது.
(3) எல்லை உற்பத்தியை விட சராசரி உற்பத்தி அதிகமாக உள்ள போது சராசரி உற்பத்தி குறைவடையும் போக்குடையது.
(4) எல்லை உற்பத்தி சராசரி உற்பத்திக்கு சமனாக உள்ள போது சராசரி உற்பத்தி அதன் கீழ் நிலையில் காணப்படும்.
(5) எல்லை உற்பத்தியும் சராசரி உற்பத்தியும் சமனாக உள்ள நிலையில் சராசரி உற்பத்தி அதன் உச்ச நிலையில் இருக்கும். (.........)



Scanned with CamScanner

14) பின்வரும் வரைபடம் நீண்டகால சராசரிச் செலவு வளையியைக் காட்டுகின்றது.




வெளியீட்டினை $Q_2$ இனை விட அதிகமாக மேற்கொண்டால்

(1) உற்பத்தி அதிகரிப்பதால் செலவுகள் வீழ்ச்சியடையும்


(2) பொருளாதார சிக்கனமின்மைகள் காணப்படும்

(3) பொருளாதார சிக்கனங்கள் காணப்படும்

(4) நிலையான செலவுகள் காணப்படும்

(5) உள்ளீடுகள் அதிகரிப்பதை விட வெளியீடுகள் கூடுதலாக இருக்கும் (.........)

15) பின்வரும் வரைபடம் குறுங்கால மொத்த உற்பத்தி வளையியைக் காட்டுகின்றது.




ஊழியம் 2 அலகில் இருந்து 3 அலகுகளாக அதிகரிக்கும் போது மூன்றாவது வேலையாளுக்கான எல்லை உற்பத்தி

(1) 1 அலகு வெளியீடு

(2) 2 அலகு வெளியீடுகள்

(3) 3 அலகு வெளியீடுகள்

(4) 4 அலகு வெளியீடுகள்

(5) 5 அலகு வெளியீடுகள் (.........)

16) பின்வருவனவற்றுள் ஒரு நிறுவனத்தின் நிலையான கிரயமாகக் கொள்ளப்படாதது எது?

(1) தேய்வுக் கட்டணம்

(2) காப்புறுதிக் கட்டணம்

(3) மூலதனத்திற்கான வட்டிக் கொடுப்பனவு

(4) மூலப்பொருள் கொடுப்பனவு

(5) ஒப்பந்த அடிப்படையில் வேலையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள முகாமையாளர்களுக்கான சம்பளக் கொடுப்பனவு (.........)



Scanned with CamScanner

17) உற்பத்தியில் ஒருவகைச் சிறப்புத் தன்மையைக் கொண்டிருத்தல். கைத்தொழிலுக்குள் நுழைவதற்குப் பூரண தடைகள் காணப்படுதல் என்ற பண்புகள் கொண்ட சந்தை அமைப்பு எது?

(1) நிறை போட்டி


(2) தனியுரிமை


(3) தனியுரிமைப் போட்டி

(4) சிலருரிமை

(5) முதலாளித்துவ சந்தை (..........)

18) பின்வரும் வரைபடங்கள் $A, B$ என்ற இரண்டு நிறைபோட்டி நிறுவனங்களின் சமநிலைகளை வெளிப்படுத்துகின்றது.




$A, B$ நிறுவனங்கள் அனுபவிக்கும் சமநிலைகள் எது?

(1) நிறுவனம் $A$ சாதாரண இலாபம் $B$ அசாதாரண இலாபம்

(2) நிறுவனம் $A$ அசாதாரண இலாபம் $B$ சாதாரண இலாபம்

(3) வெளியீடு மாற்றமின்றி இருப்பதால் இரண்டு நிறுவனங்களும் சாதாரண இலாபம்

(4) நிறுவனம் $A$ நட்டம் $B$ சாதாரண இலாபம்

(5) நிறுவனம் $A$ நட்டம் $B$ அசாதாரண இலாபம் (..........)

agaram.lk

19) பின்வருவனவற்றுள் எது நிறைபோட்டித் தொழிலின் பண்பு அல்லாதது

(1) மேலிருந்து கீழாக இடமிருந்து வலமாக சரிந்துசெல்லும் கேள்விக்கோடு

(2) தனிப்பட்ட ஒவ்வொரு நிறுவனத்திற்கும் பூரண நெகிழ்ச்சி கொண்ட கேள்விக்கோடு

(3) ஓரளவு வேறுபடுத்தப்பட்ட உற்பத்திகள்

(4) ஒவ்வொரு நிறுவனமும் தனது வெளியீட்டு மட்டத்தை நிர்ணயித்தல்

(5) தொழிலினது மொத்த நிரம்பலில் ஒவ்வொன்றும் ஒரு சிறு விகிதாசாரத்தை நிரம்பல் செய்யும் பல நிறுவனங்கள் இருத்தல் (..........)

20) நிறைபோட்டி நிறுவனமொன்றின் குறுங்கால செலவு தொடர்பான தகவல்கள் வருமாறு

| வெளியீடு அளவு Q | எல்லைச் செலவு MC |
|---|---|
| 0 | – |
| 1 | 50 |
| 2 | 28 |
| 3 | 20 |
| 4 | 14 |
| 5 | 18 |
| 6 | 20 |

இந்நிறுவனத்தின் ஐந்தாவது அலகு வெளியீட்டிற்கான சராசரிச் செலவு யாது?

(1) 36 (2) 36.3 (3) 45 (4) 49.3 (5) 64 (..........)



Scanned with CamScanner

21) உற்பத்தி காரணிகளுக்கான நிரம்பல் நெகிழ்ச்சி ஒன்றுக்கு குறைவாக இருக்கும் போது
(1) மாற்றல் கட்டணத்தைவிட சிக்கன வாடகை பெரிதாக இருக்கும்.
(2) சிக்கன வாடகையை விட மாற்றல் கட்டணம் பெரிதாக இருக்கும்.
(3) சிக்கன வாடகையும் மாற்றல் கட்டணமும் சமமாக இருக்கும்.
(4) முழுவதும் சிக்கன வாடகையாக இருக்கும்.
(5) முழுவதும் மாற்றல் கட்டணமாக இருக்கும். (.........)

22) வர்த்தக சகட ஓட்டம் தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் தவறானது எது?
(1) வர்த்தக சகட ஓட்டத்தின் மந்தம் என்பது பொருளாதாரப் பின்னடைவு முடிவடைந்து விரிவாக்கம் ஆரம்பமாகும் கட்டமாகும்.
(2) விரிவாக்கக் கட்டத்தின் மிக உச்சமான சந்தர்ப்பமாக உச்சியைக் கருத முடியும்.
(3) உச்சிக்கும் பள்ளத்திற்கும் (*Trough*) இடையிலான காலஎல்லை பின்னடைவுக் காலகட்டமாகும்.
(4) பள்ளத்திற்கும் உச்சிக்கும் இடையிலான காலகட்டம் விரிவாக்க காலகட்டமாகும்.
(5) விரிவாக்கக் காலம் பின்னடைவுக் காலத்தை விடக் குறுகியதாக இருக்கும். (.........)

23) வருமானம் ரூபா 2000 ஆக உள்ளபோது சராசரி நுகர்வு நாட்டம் 0.8 ஆகும். வருமானம் ரூபா 4000 ஆக உள்ள போது எல்லை நுகர்வு நாட்டம் 0.7 ஆகும். இவ் எளிய பொருளாதாரத்தின் சேமிப்புச் சார்பு யாது?
(1) $S = 200 + 0.7y$ (2) $S = -400 + 0.8y$
(3) $S = -200 + 0.7y$ (4) $S = -400 + 0.4y$
(5) $S = -400 + 0.3y$ (.........)

24) பின்வருவனவற்றுள் எது மொத்தக் கேள்வியின் கூறான நுகர்வுச் செலவில் மாற்றத்தை ஏற்படுத்துவதில்லை?
(1) செல்வம்
(2) எதிர்கால விலை அல்லது வருமானம்
(3) வட்டிவீதம்
(4) உற்பத்தித்திறன்
(5) வருமானவரி (.........)

agaram.lk

25) தன்னியல்பான முதலீடு ($I$) 50 இலிருந்து 100 வரை அதிகரிக்கும் போது நுகர்வு நாட்டம் 0.75 என எடுகோள் கொள்ளப்படுமாயின் உற்பத்தியில் ஏற்பட்ட மாற்றம் எது?
(1) 100 (2) 200 (3) 250
(4) 325 (5) 420 (.........)

26) உள்நாட்டு வருமானம் மற்றும் சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பவற்றுக்கிடையிலான வேறுபாடு எது?
(1) தேறிய நேரில் வரி மற்றும் தேறிய ஏற்றுமதி
(2) மூலதனத் தேய்வு மற்றும் தேறிய வெளிநாட்டுக் காரணி வருமானம்
(3) மூலதனத் தேய்வு மற்றும் நேர் வரிகள்
(4) தேறிய நேரில் வரிகள் மற்றும் தேறிய வெளிநாட்டுக் காரணி வருமானம்
(5) தேறிய நேரில் வரிகள் மற்றும் மூலதனத் தேய்வு (.........)

27) நாணயத்தின் சுற்றோட்ட வேகம் என்பதன் மூலம் கருதப்படுவது
(1) பொதுமக்கள் வைத்திருக்கும் நாணயத் தொகையாகும்.
(2) குறுகிய பணநிரம்பலுக்கும் விரிந்த பணநிரம்பலுக்கும் இடையிலான விகிதமாகும்.
(3) நாணய அலகொன்று குறிப்பிட்டதொரு காலத்தினுள் எத்தனை தடவைகள் கொடுக்கல் வாங்கல்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றதென்பதாகும்.
(4) பொது மக்கள் வைத்திருக்கும் நாணயத் தொகையும் பொது மக்களுக்கு உரியதாக வர்த்தக வங்கிகளில் காணப்படுகின்ற கேள்வி வைப்புக்களின் தொகையுமாகும்.
(5) பொருளாதாரத்தில் வெளியீட்டின் பௌதீக ரீதியான பருமன் ஆகும். (.........)


Scanned with CamScanner

28) குறிப்பிட்டதொரு பொருளாதாரத்தில் ஊழியர்களுக்குச் செலுத்துகின்ற பணச் சம்பளம் அதிகரித்தது. ஆயினும் அவர்களது உண்மைச் சம்பளம் வீழ்ச்சியடைந்தது. அதற்கான காரணமாக இருக்கக் கூடியது

(1) பணச் சம்பளம் அதிகரிக்கின்ற வேகத்தைவிட அதிக பணவீக்க வேகம் காணப்பட்டமையாகும்.
(2) நலன்புரிச் செலவுகள் குறைக்கப்பட்டமையாகும்.
(3) மேலதிக நேர வேலை குறைந்தமையாகும்.
(4) வாழ்க்கைச் செலவு அதிகரித்தமையாகும். (..........)
(5) பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டமையாகும்.

29) உயர்வலு நாணயத்தொகை அதிகரிப்பதில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள எந்தக் காரணி தாக்கத்தை ஏற்படுத்தும்?

(1) வர்த்தக வங்கிகள் அரசாங்கத்திற்கு வழங்கியுள்ள கடன்கள்
(2) ஒருங்கிணைந்த வங்கிமுறையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களிலான குறைவு
(3) மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களிலான வீழ்ச்சி
(4) மத்திய வங்கி அரசாங்கத்திற்கு வழங்கியுள்ள தேறிய கடனின் அதிகரிப்பு (..........)
(5) மத்திய வங்கியில் வணிக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள் குறைதல்

30) குறிப்பிட்டதொரு பொருளாதாரம் தொடர்பாக பின்வரும் தகவல்கள் உமக்குத் தரப்படுகின்றன.
பொதுமக்களிடமுள்ள சட்டமுறைப் பணத்தொகை ரூபா 1000 ஆகும்.
வணிக வங்கிகள் பேணிச்செல்ல வேண்டுமென மத்தியவங்கி விதித்துள்ள ஒதுக்கு வீதம் 10%
வணிக வங்கி அமைப்பின் ஐந்தொகை வருமாறு

| | | | |
|---|---|---|---|
| மொத்த வைப்பு | 1000 | ஒதுக்கங்கள் | 125 |
| | | கடன் | 875 |
| | 1000 | | 1000 |

மேலுள்ள வங்கியமைப்பில் மிகை ஒதுக்கு பூச்சியமாகும் நிலையில் வங்கி அமைப்பின் ஆரம்ப வைப்பு மற்றும் ஒடுங்கிய பணநிரம்பல் எவ்வளவு?

| | ஆரம்பவைப்பு | $M_1$ ஒடுங்கிய பணநிரம்பல் |
|---|---|---|
| (1) | 1125 | 2125 |
| (2) | 1250 | 2250 |
| (3) | 1250 | 1250 |
| (4) | 2250 | 3250 |
| (5) | 2250 | 1250 |

(..........)

31) இலங்கை மத்திய வங்கி அரசு பிணையங்களைக் கொள்வனவு செய்வதன் மூலம் எதிர்பார்ப்பது


(1) பிணைகளின் சந்தையை விரிவாக்கல்
(2) சந்தையில் குறை திரவத்தன்மை நிலைமையின் போது திரவத் தன்மையைப் பெற்றுக் கொடுத்தல்
(3) ஏனைய முதலீட்டாளர்களைப் போன்று முதலீட்டு அனுகூலத்தைப் பெறல்
(4) முன்மாதிரியை வழங்குதல் (..........)
(5) மேற்கூறிய எதுவும் பொருத்தமற்றது

32) பின்வருவனவற்றுள் பண்புக்கடன் கட்டுப்பாட்டுக் கருவி அல்லாதது எது?

(1) கடன்களை மட்டுப்படுத்தல்
(2) தெரிவு வட்டி வீதங்களை நிர்ணயித்தல்
(3) நியதி ஒதுக்கு வீதம்
(4) நல் ஊக்குவிப்பு (..........)
(5) கடனுக்கான பிணைகளை நிர்ணயித்தல்


agaram.lk
Scanned with CamScanner

33) விலை/செலவு/நலன்




$Q_0$ – சந்தை உருவாக்கிய தொகை

$Q_1$ – வினைத்திறனான தொகை

மேலுள்ள வரைபடம் குறிக்கும் வெளிவாரி விளைவு பின்வருவனவற்றுள் எது?

(1) பாடசாலைக்கு அருகில் காணப்படும் மதுபானக்கடைகள்
(2) தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவுகளால் நிலத்தடி நீர் மாசுபடல்
(3) புதிய தொழினுட்பம் காரணமாகச் செய்யப்பட்ட ஆய்வுகள்
(4) கல்வி சார்ந்த இணையத்தள வெளியீடுகள்
(5) வீதியின் கரையோரங்களில் குவிக்கப்படும் கழிவுப் பொருட்கள் (.........)

34) சந்தைத் தோல்வி என்பது
(1) விலைக் கட்டுப்பாட்டின் காரணமாக கறுப்புச் சந்தை உருவாகுதலாகும்.
(2) சந்தை சக்திகளின் மூலம் வளங்கள் வினைத் திறனான விதத்தில் பகிர்ந்தளிக்கப்படாத நிலையாகும்.
(3) கேள்விக்கு ஏற்றவாறு நிரம்பலை அதிகரிக்கச் செய்ய முடியாத நிலையாகும்.
(4) மிகை நிரம்பலினூடாக விலைகள் துரிதமாக வீழ்ச்சியடைதலாகும்.
(5) சந்தைப் பொருளாதாரமொன்றில் அரசு தலையிடும் போது எதிர்பார்த்த விளைவுகளைப் பெற்றுக் கொள்ளாமல் பொருளாதாரத்தில் வினைத்திறனற்ற தன்மை விருத்தி பெறுவது ஆகும். (.........)

agaram.lk

35) பின்வருவனவற்றுள் நிறுவனக் கீழ் கட்டமைப்பு வசதி எது?
(1) கண்காணிப்பு நிறுவனங்கள்
(2) பெருந்தெருக்கள்
(3) அதிவேகப் பாதைகள்
(4) பாலங்கள்
(5) கட்டிடங்கள் (.........)

36) 2014 அம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக வரியரசிறையின் பங்கு யாது?

| | | |
|---|---|---|
| (1) 12 | (2) 12.8 | (3) 13 |
| (4) 13.2 | (5) 14 | (.........) |

37) பொதுப்பண்டம் அல்லாதது
(1) வீதி விளக்குகள்
(2) தேசிய பாதுகாப்பு
(3) கலங்கரை விளக்கம்
(4) உலக அறிவு
(5) விமானச் சேவை (.........)



Scanned with CamScanner

38) குறிப்பிட்ட பொருளாதாரத்தின் வருமான மட்டங்களும் அறவிடப்படும் வரிப்பணமும் பின்வருமாறு தரப்படுகின்றது.

| வருமானம் | வரிப்பணம் |
|---|---|
| 50 000 | 15 000 |
| 100 000 | 25 000 |
| 200 000 | 40 000 |

மேற்குறிப்பிட்ட பொருளாதாரத்தில் அறவிடப்படும் வரிமுறைமை
(1) விருத்திமுறை வரி (2) விகிதசம வரி (3) வருமான வரி
(4) ஒடுங்குமுறை வரி (5) தனிப்பட்ட வரி
(..........)

39) அரச வருமானத்தின் பிரதான வருமான மூலமாக வரி அரசிறை காணப்படுகின்றது. பின்வருவனவற்றுள் எது வரி அரசிறையில் உள்ளடங்குவதில்லை?
(1) வருமான வரி (2) பெறுமதிசேர் வரி (3) ஏற்றுமதி வரி
(4) கலால் தீர்வை (5) இறக்குமதி வரி
(..........)

40) அரசின் இறைத் தொழிற்பாட்டுத் தரவுகள் பின்வருமாறு தரப்படுகின்றது. (மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக)

| | |
|---|---|
| மொத்த அரசிறை மற்றும் கொடைகள் | 13.6 |
| கொடைகள் | 0.3 |
| மீள் கொடுப்பனவைக் கழித்த செலவினமும் கடன் வழங்கலும் | 18.0 |
| மீண்டெழும் செலவினம் | 13.7 |

தரவுகளின் படி நடைமுறைக் கணக்கு நிலுவை, முதன்மைக் கணக்கு நிலுவை திரண்ட நிலுவை என்பவற்றைச் சரியாகக் காட்டும் விடைத் தொகுதி

| | நடைமுறைக் கணக்கு நிலுவை | முதன்மைக் கணக்கு நிலுவை | திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| (1) | −0.4 | −0.7 | −4.4 |
| (2) | 0.4 | 0.7 | 4.4 |
| (3) | −1.3 | −1.6 | −6.0 |
| (4) | 1.3 | 1.6 | 6.0 |
| (5) | 1.1 | −0.8 | −5.2 |

(..........)

agaram.lk

41) ஒப்பீட்டு நன்மைக் கோட்பாட்டுக்கு அடிப்படையாகக் கொள்ளும் கருதுகோள் அல்லாதது எது?
(1) பூரணமான காரணி அசைவு
(2) நிலையான அளவுத்திட்ட விளைவு
(3) உற்பத்தி தொடர்பிலோ நுகர்வு தொடர்பிலோ வெளிவாரி விளைவு ஏற்படுவதில்லை
(4) உற்பத்திக்கு அதிகளவு உழைப்பு பயன்படுத்தப்படல்
(5) போக்குவரத்துச் செலவு கருத்தில் கொள்ளப்படுவதில்லை (..........)

42) இலங்கையின் மிகப்பெரிய இறக்குமதிச் சந்தை எது?
(1) சீனா (2) இந்தியா (3) மத்திய கிழக்கு
(4) சிங்கப்பூர் (5) அமெரிக்கா (..........)

43) ஒரு நாட்டின் பண்ட வர்த்தக மாற்றுவிகிதம் 120 ஆக உள்ளபோது பின்வரும் எவ்விளைவு இடம்பெறலாம்?
(1) நாட்டின் மெய்வருமானம் குறைவடைந்து மெய் தேசிய வருமானம் குறைவடையும்.
(2) உள்நாட்டு நாணயத்தின் வெளிநாட்டுப் பெறுமதி உயர்வடையும்.
(3) குறித்த நாட்டின் ஏற்றுமதி அலகொன்றின் இறக்குமதி இயலளவு வீழ்ச்சியடையும்.
(4) நாட்டின் வர்த்தக நிலுவை, சென்மதி நிலுவை என்பன பாதக நிலையை அடையும்.
(5) உள்நாட்டு நாணயத்தின் வெளிநாட்டுப் பெறுமதி வீழ்ச்சியடையும். (..........)


Scanned with CamScanner

44) இலங்கையின் சென்மதி நிலுவையின் நடைமுறைக்கணக்கில் இரண்டாந்தர வருமானம் பின்வருவனவற்றுள் எது?
(1) ஊழியர்களுக்கான நட்ட ஈடு
(2) முதலீட்டு வருமானம்
(3) தொழிலாளர் பணவனுப்பல்கள்
(4) ஒதுக்கு சொத்துக்கள்
(5) கணனி தகவல் பணிகள் (.........)

45) கொள்வனவு சக்தி சமமதிப்பு நாணயமாற்று விதத்துடன் பொருத்தமற்ற கூற்று பின்வருவனவற்றுள் எது?
(1) வெளியக சமநிலையானது தன்னிச்சையாக ஏற்படுத்தப்படும்
(2) ஒரே சமமான பொருளுக்கு ஒரே சமமான விலை எல்லா நாடுகளிலும் நிலவவேண்டும்.
(3) வியாபாரத்துக்குரிய சமமான பண்டக்கூடையின் பெறுமானங்கள் இரு நாடுகளின் பண அலகுகளில் அளவிடப்படும் பெறுமானங்களுக்கிடையிலான விகிதம்
(4) ஒவ்வொரு நாட்டு நாணயத்தைக் கொண்டும் அந்தந்த நாடுகளில் காணப்படும் விலைகளை அடிப்படையாகக் கொண்டது.
(5) மக்களின் நுகர்வு அமைப்பு நாட்டுக்கு நாடு வேறுபடுவதால் இதனை வருமான ஒப்பீட்டுக்குப் பயன்படுத்த முடியாது. (.........)

46) சாத்தியமான பொருளாதார வளர்ச்சி எண்ணக்கருவுடன் தொடர்பற்ற கூற்று எது?
(1) உற்பத்தி இயலளவில் ஏற்படும் நீண்டகால அதிகரிப்பு.
(2) வளங்களின் அளவிலும் தரத்திலும் ஏற்படும் அதிகரிப்பின் விளைவாக ஏற்பட முடியும்.
(3) உற்பத்தி சாத்திய வளையியின் வெளிப்புற நகர்வின் மூலம் காட்டமுடியும்.
(4) நீண்டகால வளர்ச்சியாகும்.
(5) வேலையின்றி இருந்த வளங்களைப் பயன்படுத்துவதால் ஏற்படலாம். (.........)

47) பொருளாதார வளர்ச்சியின் பிரதான அமையச் செலவொன்றாகக் கருதக் கூடியது பின்வருவனவற்றுள் எது?
(1) மனித ஆற்றல் பயனொழிந்து போதல்
(2) பணவீக்கம் ஏற்படும் அபாயம் காணப்படல்
(3) வருமானம் மற்றும் சொத்துப் பரம்பலில் ஏற்றத்தாழ்வுகள்
(4) இன்றைய சந்ததியின் நிகழ்கால நுகர்வு இழக்கப்படல்
(5) புவி வெப்பமடைதல் (.........)

agaram.lk

48) பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்க கையாளக்கூடிய நிரம்பல் பக்க கொள்கை எது?
(1) உட்கட்டமைப்பு மீதான அரசமுதலீடுகளை அதிகரித்தல்
(2) ஆராய்ச்சி அபிவிருத்தி வசதிகளில் முதலீடுகளை அதிகரித்தல்
(3) வட்டி வீதத்தைக் குறைத்தல்
(4) பேரினப் பொருளாதாரவளர்ச்சி உறுதி பேணல்
(5) தனியார் மயமாக்கம், ஊழிய மூலதனச் சந்தைகளை மறுசீரமைத்தல் (.........)

49) பின்வரும் கூற்றுக்களில் தவறான கூற்று எது?
(1) எட்டு சார்க் (SAARC) நாடுகள் மத்தியில் இலங்கை மிகவுயர்ந்த மானிட அபிவிருத்தி மட்டத்தைக் கொண்டுள்ளது.
(2) 2013 ஆம் ஆண்டில் இலங்கையின் மானுட அபிவிருத்திச் சுட்டி 0.75 ஆகும்.
(3) இலங்கையின் மனிதவள சுட்டியின் பெறுமானம் 73 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.
(4) உயர்வான மனிதவள அபிவிருத்திப் பெறுமானமுடைய நாடுகளில் இலங்கையும் உள்ளடங்கும்.
(5) இலங்கையில் மனிதவள சுட்டியின் பெறுமானம் உயர்வாக இருக்கக் காரணம் வறுமைக்குச் சார்பான பொருளாதார வளர்ச்சித் திட்டங்களாகும். (.........)

50) 2013 இல் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் மொத்தத்தேசிய உற்பத்தியின் விகிதமாக எவ்வளவு?
(1) 5.3% (2) 6% (3) 6.5% (4) 7.9% (5) 8% (.........)



Scanned with CamScanner

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

Field Work Centre

FWC

# தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
# Term Examination, March - 2016

| தரம் :- 13 (2016) | பொருளியல் – II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

அறிவுறுத்தல்கள் :-

❖ உப பிரிவு 'அ' உப பிரிவு 'ஆ' ஆகியவற்றிலிருந்து குறைந்தபட்சம் இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## உப பிரிவு 'அ'

(இப்பிரிவிலிருந்து குறைந்தது இரு வினாக்களைத் தெரிவு செய்க)

01) (i) மீளமைக்க முடியாத வளங்கள் மீளமைக்கக்கூடிய வளங்கள் என்பவற்றை விளக்கி அவற்றுக்கு இவ்விரு உதாரணங்கள் தருக. (4 புள்ளிகள்)

(ii) அருமைப் பிரச்சனைகளுக்கு மத்தியில் ஏற்படும் மூன்று விதமான தேர்வுகளும் எவை? அவை அருமையினால் மட்டுமே ஏற்படுகின்றதா என விளக்குக. (4 புள்ளிகள்)

(iii) என் தரவுகளைப் பயன்படுத்தி அதிகரிக்கும் அமையச் செலவு கொண்ட உற்பத்தி இயல்தரவு எல்லையை அமைத்து அது ஏன் நடைமுறைக்குப் பொருத்தமானதாக உள்ளது எனக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(iv) சந்தைப் பொருளாதாரமொன்றில் 'யாருக்காக உற்பத்தி செய்தல்' என்ற பிரச்சனைக்கான தீர்வு காரணிச் சந்தைச் செயற்பாடுகளால் தீர்மானிக்கப்படுகின்றது. ஏற்றுக் கொள்ளலாமா? உமது விடையினை விளக்குக. (4 புள்ளிகள்)

(v) சந்தை முறையில் விலையின் முக்கியமான மூன்று கருமங்களைக் குறிப்பிட்டு, அவற்றைச் சுருக்கமாக விளக்குக. (4 புள்ளிகள்)

02) (i) தனிப்பட்ட கேள்வி சந்தைக்கேள்வி என்பவற்றை நிர்ணயிக்கும் காரணிகள் எவை? (4 புள்ளிகள்)

(ii) கேள்வி ஒடுக்கம் என்றால் என்ன? பதிலீட்டு விளைவு கேள்வி ஒடுக்கத்தை எவ்வாறு பிரதிபலிக்கின்றது? (4 புள்ளிகள்)

(iii) 'நிரம்பலை நிர்ணயிக்கும் காரணிகளுள் தொடர்புடைய பொருட்களின் விலையும் ஒன்றாகும்' உதாரணங்களைக் குறிப்பிட்டு இக்கூற்றை விளக்குக. (4 புள்ளிகள்)

(iv) பின்வரும் பொருட்கள் மீது ஏற்படும் விலை அதிகரிப்பு மொத்த வருமானத்தில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தும்? உமது விடைகளை விளக்குக.

I. அரிசி


II. ஆடம்பரக் கார்

(4 புள்ளிகள்)



agaram.lk
Scanned with CamScanner

(v) பின்வரும் வரைபடம் சிறுதானியப் பயிர்ச்செய்கைக்கு வழங்கப்பட்ட உரமானியத்தைக் காட்டுகின்றது.




மானியம் வழங்கப்பட முன்பும் மானியம் வழங்கப்பட்ட பின்பும் பின்வருவனவற்றைத் தருக.

(அ) நுகர்வோன் மிகை

(ஆ) உற்பத்தியாளன் மிகை

(இ) அரச செலவீனம்

(ஈ) நலன் (4 புள்ளிகள்)

03) (i) கணக்கியல் செலவு, பொருளியில் செலவு என்பவற்றை விளக்குக. (4 புள்ளிகள்)

(ii) குறுங்கால சராசரி மாறும் செலவுக் கோட்டுக்கான காரணத்தைக் குறிப்பிட்டு அதனை விளக்குக. (4 புள்ளிகள்)

(iii) நிறைபோட்டி நிறுவனமொன்றின் கேள்விக்கோடு எத்தகையது? அவ்வாறான கேள்விக் கோட்டைக் கொண்டிருப்பதற்கான காரணங்கள் எவையெனக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(iv) கீழுள்ள அட்டவணை நிறுவனமொன்றின் மொத்தச் செலவு மற்றும் எல்லைச் செலவுகளைக் காட்டுகின்றது.

| வெளியீடு $(Q)$ | மொத்தச் செலவு $(TC)$ | எல்லைச் செலவு $(MC)$ | சராசரி நிலையான செலவு $(AFC)$ |
|---|---|---|---|
| 1 | 200 | 20 | – |
| 2 | 215 | 15 | – |
| 3 | 225 | 10 | – |
| 4 | 240 | 15 | – |
| 5 | 260 | 20 | – |

சராசரி நிலையான செலவைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(v) பின்வருவன எச்சந்தை அமைப்புக்களுக்குப் பொருத்தமானவை?

(அ) விவசாயப் பொருள்

(ஆ) நீர் வழங்கல்

(இ) சாப்பாட்டுக் கடை

(ஈ) கார், இலத்திரனியல் (4 புள்ளிகள்)

04) (i) பணவீக்க இடைவெளி, பணச்சுருக்க இடைவெளி என்பவற்றை விளக்குக. (4 புள்ளிகள்)

(ii) நிலையான மூலதனவாக்கம், இருப்புமாற்றம் என்பவற்றை வேறுபடுத்துக. அவை ஏன் முதலீட்டுச் செலவாகக் கொள்ளப்படுகின்றது? உமது விடைக்கான காரணங்களைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)



agaram.lk
Scanned with CamScanner

(iii) கருதுகோள் ரீதியான பொருளாதாரமொன்றின் பின்வரும் தரவுகள் உமக்குத் தரப்படுவதாகக் கொள்க. (சகல புள்ளி விபரங்களும் ரூபா மில்லியன்களில்)

| | |
|---|---|
| சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி | 9784 |
| தனியார் சேமிப்புக்கள் | 2196 |
| அரச முதலீடுகள் | 668 |
| தனியார் முதலீடுகள் | 2236 |
| வெளிநாட்டிலிருந்தான காரணி வருமானம் | −240 |
| அரச சேமிப்பு | −127 |
| வெளிநாட்டிலிருந்தான தேறிய நடைமுறைமாற்றல் | 813 |

மேலுள்ள தகவல்களைப் பயன்படுத்தி பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

(அ) மொத்த முதலீடு (2 புள்ளிகள்)

(ஆ) உள்நாட்டு சேமிப்பு (2 புள்ளிகள்)

(இ) தேசிய சேமிப்பு (2 புள்ளிகள்)

(ஈ) முதலீட்டு விகிதம் (2 புள்ளிகள்)

(iv) மறைந்திருக்கும் பொருளாதார நடவடிக்கைகளின் பண்புகள் எவை? அவற்றைத் தவிர்ப்பதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் எவை எனக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

05) (i) மூடப்பட்ட பொருளாதாரமொன்றின் சமனிலையைக் கணிக்கும் போது பயன்படுத்தப்படும் மாறிகள் எவை? (4 புள்ளிகள்)

(ii) எல்லை நுகர்வு நாட்டத்தினதும் எல்லைச் சேமிப்பு நாட்டத்தினதும் கூட்டுத்தொகை எப்போதும் ஒன்றுக்குச் சமனாக இருப்பது ஏன்? (4 புள்ளிகள்)

(iii) அரசாங்கமும் வெளிநாட்டுத் துறையும் இல்லாத ஒரு எளிய பேரினப் பொருளாதார மாதிரியைக் கருதுக. சேமிப்புச் சார்பு $S = -300 + 0.1y$ ஆக வரையறுக்கப்படும் நிலையில் முதலீடு 200 ஆல் அதிகரிக்கின்றது.

(அ) நுகர்வுச் சார்பைத் தருக. (1 புள்ளிகள்)

(ஆ) நுகர்வு எவ்வளவால் அதிகரிக்கும் (3 புள்ளிகள்)

(இ) இப் பொருளாதாரத்தின் வரிப்பெருக்கி யாது? (2 புள்ளிகள்)

(iv) ஒரு மூடப்பட்ட பொருளாதாரம் பற்றிய பேரினப் பொருளாதார மாறிகள் வருமாறு

நுகர்வுச் செலவு $C = 0.8yd$

வரிகள் $T = 0.1y$

முதலீடு $I = 1500$

அரசாங்க செலவீடு $G = 2700$

(அ) இப் பொருளாதாரத்தின் சமநிலைத்தேசிய வருமானம் யாது? (2 புள்ளிகள்)

(ஆ) சேமிப்புக்கும் முதலீட்டுக்கும் இடையிலான வேறுபாடு எவ்வளவு? (4 புள்ளிகள்)

## உப பிரிவு 'ஆ'

(இப்பிரிவிலிருந்து குறைந்தது இரு வினாக்களைத் தெரிவு செய்க)

06) (i) உற்பத்தியாளர் விலைச் சுட்டெண்ணைத் தொகுத்துள்ள திணைக்களம் எது? இச்சுட்டெண்ணை எந்தச் சுட்டெண்ணுக்குப் பிரதியீடாகப் பயன்படுத்தலாம்? (2 புள்ளிகள்)

(ii) வெளிப்படையான பணவீக்கம், அடிப்படைப் பணவீக்கம் என்பவற்றை விளக்குக. (5 புள்ளிகள்)

(iii) பெயரளவு வருமானம், மெய் வருமானம் என்பவற்றை வேறுபடுத்தி மெய் வருமானம் எப்போது உயர்வாக இருக்கும் எனக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(iv) பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த பயன்படுத்தக்கூடிய நடவடிக்கைகள் எவை? அவற்றுள் ஒன்றைச் சுருக்கமாக விளக்குக. (4 புள்ளிகள்)

(v) பரிமாற்றச் சமன்பாட்டின் எடுகோள்கள் எவை? பண நிரம்பலுக்கும் விலை மட்டத்திற்கும் உள்ள தொடர்பு பற்றி எதனை வெளிப்படுத்துகின்றது எனக் குறிப்பிடுக. (5 புள்ளிகள்)

agaram.lk



Scanned with CamScanner

07) (i) வணிக வங்கிகளின் பிரதான கருமங்கள் எவை? (3 புள்ளிகள்)

(ii) பண ஆக்கம் என்றால் என்ன? அதனை வரையறுக்கும் காரணிகளை விளக்குக. (5 புள்ளிகள்)

(iii) உயர்வலுப் பணம் பணநிரம்பலுடன் எவ்வாறு தொடர்புபடுகின்றது எனக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(iv) கற்பனையான பொருளாதாரமொன்றின் தரவுகள் உமக்குத் தரப்படுகின்றன. (எல்லாத் தரவுகளும் மில்லியன் ரூபாய்களில்)

| | |
|---|---|
| பொதுமக்களால் வைத்திருக்கப்பட்ட நாணயம் | 264 |
| வர்த்தக வங்கிகளிடமுள்ள நாணயம் | 75 |
| மத்திய வங்கியிலுள்ள வர்த்தக வங்கிகளின் வைப்புக்கள் | 148 |
| வர்த்தக வங்கிகளில் பொதுமக்களால் வைத்திருக்கப்பட்ட கேள்வி வைப்புக்கள் | 220 |
| வர்த்தக வங்கிகளில் பொதுமக்களால் வைத்திருக்கப்பட்ட தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்கள் | 2574 |
| சீரமைக்கப்பட்ட வெளிநாட்டு நாணய வைப்புக்கள் | 359 |

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

(அ) ஒதுக்குப் பணம்

(ஆ) குறுகிய பணநிரம்பல்

(இ) விரிந்த பண நிரம்பல் $(M_2)$

(ஈ) திரட்டப்பட்ட விரிந்த பண நிரம்பல் $(M_2b)$

(உ) பணப் பெருக்கி $(M_2b)$ (5 × 2 = 10 புள்ளிகள்)

08) (i) வெளிவாரி விளைவுகளால் ஏற்படும் சந்தைத் தோல்விகளைத் தவிர்ப்பதற்கு மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் எவை? (4 புள்ளிகள்)

(ii) மேன்மைப் பண்டம் என்றால் என்ன? தனியார் பண்டத்திலிருந்து அது எவ்வாறு வேறுபடுகின்றது? (4 புள்ளிகள்)

(iii) பொருளாதார வகைப்படுத்தலின் படி அரசின் நடைமுறைச் செலவுகளைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(iv) வரிச் சுமையை 'முன்னோக்கிப் பெயரச் செய்தல்', 'பின்னோக்கிப் பெயரச் செய்தல்' என்பவற்றை விளக்குக. (4 புள்ளிகள்)

(v) அண்மைய ஆண்டுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக வரி அரசிறை ஏன் வீழ்ச்சியடைந்து செல்கின்றது? (5 புள்ளிகள்)

09) (i) முழு நன்மை, ஒப்பீட்டு நன்மை என்பவற்றை வரைவிலக்கணப்படுத்துக. (5 புள்ளிகள்)

(ii) வர்த்தகப் பாதுகாப்பின் நன்மைகள், தீமைகளை அட்டவணைப்படுத்துக. (5 புள்ளிகள்)

(iii) பெயரளவுப் பாதுகாப்பு வீதம், பயனுறுதி வாய்ந்த பாதுகாப்பு வீதம் என்பவற்றை விளக்குக. (5 புள்ளிகள்)

(iv) இலங்கையின் சென்மதி நிலுவையின் நடைமுறை மற்றும் மூலதனக் கணக்கு வெளிப் படுத்துகையின் மாதிரி அமைப்பைத் தருக. (5 புள்ளிகள்)

10) (i) பொருளாதார வளர்ச்சி என்பதை வரைவிலக்கணப்படுத்துக. (3 புள்ளிகள்)

(ii) நீண்டகாலப் பொருளாதார வளர்ச்சி ஏற்படும் போது நிகழும் பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றங்களைக் குறிப்பிட்டு அதற்கான காரணங்களைத் தருக. (5 புள்ளிகள்)

(iii) நாடொன்றின் வாழ்க்கைத் தரத்தைப் பிரதிபலிக்கும் குறிகாட்டி என்ற வகையில் பொருளாதார வளர்ச்சியின் வரையறைகள் எவை? (4 புள்ளிகள்)

(iv) நிலைத்து நிற்கும் அபிவிருத்தி என்றால் என்ன? நிலைத்து நிற்கும் அபிவிருத்தியில் நாடுகள் ஈடுபாடு கொள்வதற்கான காரணங்கள் எவை? (4 புள்ளிகள்)

(v) சாத்திய வள வெளியீடு, உச்ச வெளியீடு என்பவற்றை வேறுபடுத்துக. (4 புள்ளிகள்)

agaram.lk



Scanned with CamScanner

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

**Field Work Centre**

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2016

## Term Examination, March - 2016

FWC

| பொருளியல் | புள்ளித்திட்டம் | தரம் :- 13 (2016) |
|---|---|---|

### பொருளியல் - I

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01) | 3 | 11) | 5 | 21) | 1 | 31) | 2 | 41) | 4 |
| 02) | 5 | 12) | 1 | 22) | 5 | 32) | 3 | 42) | 2 |
| 03) | 1 | 13) | 4 | 23) | 3 | 33) | 4 | 43) | 2 |
| 04) | 4 | 14) | 2 | 24) | 4 | 34) | 2 | 44) | 3 |
| 05) | 5 | 15) | 3 | 25) | 2 | 35) | 1 | 45) | 1 |
| 06) | 2 | 16) | 4 | 26) | 5 | 36) | 2 | 46) | 5 |
| 07) | 4 | 17) | 2 | 27) | 3 | 37) | 5 | 47) | 4 |
| 08) | 1 | 18) | 5 | 28) | 1 | 38) | 4 | 48) | 5 |
| 09) | 4 | 19) | 3 | 29) | 4 | 39) | 3 | 49) | 4 |
| 10) | 3 | 20) | 1 | 30) | 2 | 40) | 1 | 50) | 3 |

$50 \times 2 = 100$ (புள்ளிகள்)

### பொருளியல் - II

உப பிரிவு 'அ'

01) (i) இயற்கையால் அளிக்கப்பட்டுள்ள உற்பத்தி வளங்களுள் பயன்பாட்டுடன் அருகிவிடும் வளங்கள் மீளமைக்க முடியாத வளங்கள் ஆகும். அவை உற்பத்திக்குப் பயன்படுத்தும் போது அளவு குறைந்து விடுகின்றது. உ+ம்:- கனிய எண்ணெய், நிலக்கரி (உ+ம் 1 புள்ளி) (விளக்கம் 1 புள்ளி)

சில வளங்கள் பயன்படுத்தப்படுவதால் அழிவடைவதில்லை. அவற்றை மீண்டும் மீண்டும் உற்பத்திக்குப் பயன்படுத்தலாம்.
உ+ம்:- மீன்வளம், வனவளம் எனினும் மீளமைக்கக்கூடிய வளங்களும் மீளமைக்க முடியாத வளங்களாக மாறி விடலாம். (உ+ம் 1 புள்ளி) (விளக்கம் 1 புள்ளி)

(ii) அருமை என்பது சமூகத்திற்குரிய வளச் சம்பாத்தியம் மனித தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளப் போதுமான அளவுக்கு இல்லாமையாகும். (1 புள்ளி)

இதனால் மூன்று விதமான தேர்வுகள் இடம்பெறுகின்றது. அவை என்ன பொருளை, எந்தளவு உற்பத்தி செய்தல், எவ்வாறு உற்பத்தி செய்தல், யாருக்காக உற்பத்தி செய்தல் என்பனவாகும். (2 புள்ளிகள்)

தேர்வுப் பிரச்சனை தோன்றுவதற்கு வளங்களின் அருமை மட்டுமல்ல வளங்களின் மாற்றுப் பயன்பாடும் காரணமாகும். (1 புள்ளி)


(iii)

| சேர்க்கைப் புள்ளி | $y$ பொருள் | $x$ பொருள் | $x$ பொருள் அமையச் செலவு |
|---|---|---|---|
| $A$ | 25 | 0 | – |
| $B$ | 22 | 1 | $3y$ |
| $C$ | 18 | 2 | $4y$ |
| $D$ | 13 | 3 | $5y$ |
| $E$ | 07 | 4 | $6y$ |
| $F$ | 00 | 5 | $7y$ |

பொருத்தமான எண் தரவுகள் (2 புள்ளிகள்)



agaram.lk
Scanned with CamScanner




சரியான வரைபடம் (1 புள்ளி)

நடைமுறையில்
- வளங்கள் சமமற்ற வகையாக காணப்படுகின்றது
- ஒரு தொழிலுக்கு வினைத்திறனாகக் காணப்படும் வளங்கள் இன்னொரு தொழிலுக்கு அதேயளவு வினைத்திறனைக் கொண்டிராமை (1 புள்ளி)

(iv) யாருக்காக உற்பத்தி செய்தல் என்பது குறித்த காலத்திற்குள்ளே சமூகத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருள் இருப்பு நாட்டு மக்களிடையே எவ்வாறு பகிர்ந்தளிக்கப்படுகின்றது என்பதை நிச்சயிப்பதாகும். (1 புள்ளி)

சமூகத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களும் சேவைகளும் நாட்டு மக்களுக்கிடையில் விலை கொடுத்து வாங்குவதற்குத் தேவையான வருமானம் எவ்வாறு பரம்பியுள்ளது என்பதை அடிப்படையாகக் கொண்டதாகும். காரணிச் சந்தையில் காரணி கொள்வனவாளரும் விற்பனையாளரும் அன்னியோன்னியமாகச் செயல்பட்டு காரணி விலையும் விற்பனை செய்யும் அளவும் நிர்ணயமாகும். அதனடிப்படையில் வருமான மட்டம் நிச்சயிக்கப்படும். (3 புள்ளிகள்)

(v)
- தகவலும் சைகையும் வழங்கும் கருமம்
- ஊக்குவிப்பை வழங்கும் கருமம்
- ஒதுக்கீடு செய்யும் கருமம் (2 புள்ளிகள்)

சந்தை முறைமையொன்றில் நுகர்வோர் உற்பத்தியாளர் மற்றும் வள உரிமையாளர்கள் எப்பொருளை அல்லது வளத்தை எந்தளவு வாங்குவது என்பதைத் தீர்மானிக்கும் பொருட்டு அவசியமான தகவல்களை சார்பு விலைகள் வழங்குகின்றன.

விலைகள் ஊக்குவிப்பை வழங்கும் காரணியாகச் செயல்படும் போது வளங்களின் உரிமையாளர் தமது வளங்களுக்கு உச்சமான இலாபத்தை உழைப்பது தொடர்பில் வழிகாட்டியாக அமையும். குறித்த ஒரு பொருளுடன் ஒப்பிடும் போது மற்றொரு பொருளின் விலை உயருமானால் விலை உயரும் பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்வதில் உற்பத்தியாளர் ஊக்கமடைகின்றனர்.

அதேபோல் வரையறுத்த அளவில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை பல்வேறு நபர்களுக்கிடையில் பகிர்வு செய்யக்கூடிய முறையை விலை தருகின்றது. (2 புள்ளிகள்)

02) (i)
- குறிப்பிட்ட பண்டத்தின் விலை
- தொடர்புடைய பண்டங்களின் விலை
- நுகர்வோர் வருமானம்
- நுகர்வோர் சுவை
- எதிர்கால எதிர்பார்க்கை (2 புள்ளிகள்)

இவை தனிப்பட்ட கேள்வியை நிர்ணயிக்கும் காரணிகளாகும். இவற்றுடன் கொள்வனவாளர் தொகையும் கட்டமைப்பும் சேர்ந்து சந்தைக் கேள்வியை நிர்ணயிக்கும். (2 புள்ளிகள்)



Scanned with CamScanner

(ii) கேள்வியை நிர்ணயிக்கும் ஏனைய காரணிகள் மாறாது உள்ள போது விலை அதிகரிக்கும் போது கேள்வித்தொகை குறைவடைதல் கேள்வி ஒடுக்கமாகும். (2 புள்ளிகள்)

ஏனையவை மாறாது நிலையாகக் காணப்படும் சந்தர்ப்பத்தில் குறித்த ஒரு பொருளின் விலையில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு அதனுடைய சார்பு விலையினை அதாவது சந்தர்ப்பச் செலவினை அதிகரிக்கச் செய்கின்றது. சந்தர்ப்பச் செலவு அதிகரிக்கும் போது மக்கள் அதனைக் கொள்வனவு செய்வதனைக் குறைத்து அதற்குப் பதிலீடான பொருட்களைக் கொள்வனவு செய்ய முற்படுவர். ஆகவே குறித்த பொருளின் விலை அதிகரிப்பு அதன் சந்தர்ப்பச் செலவினை அதிகரித்து கேள்வித் தொகையினைக் குறைவடையச் செய்கின்றது. (2 புள்ளிகள்)

(iii) ஒரே விதமான வளங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யக்கூடிய பொருட்கள் உற்பத்திச் செயற்பாட்டில் பதிலீட்டுப் பொருட்களாகக் கருதப்படும்.
உ+ம்:- மரக்கறிகளின் விலை சார்பளவில் உயரும் போது தானிய உற்பத்திக்குப் பயன்படுத்தும் நிலம் மரக்கறி உற்பத்திக்குப் பயன்படுத்தல். (2 புள்ளிகள்)

உற்பத்திச் செயற்பாட்டில் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டு உற்பத்தியாகும் வேறு பொருள்களையும் காண முடியும். உ+ம்:- ஆடு - ஆட்டுத்தோல் (2 புள்ளிகள்)

(iv)
I. அரிசியன் விலையில் அதிகரிப்பு ஏற்படும் போது கேள்வித் தொகையின் மீது விகிதாசார ரீதியில் குறைவானதொரு வீழ்ச்சியைக் கொண்டு வருகின்றது. எனவே அரிசியின் விலையினாலும் தொகையினாலும் நிர்ணயிக்கப்படும் மொத்த வருமானம் அதிகரிக்கின்றது. (2 புள்ளிகள்)

II. ஆடம்பரக் காரின் விலை அதிகரிப்பு கேள்வித் தொகையின் மீது விகிதாசார ரீதியில் பெரியதொரு வீழ்ச்சியைக் கொண்டு வருகின்றது. எனவே காரின் விலையினாலும், தொகையினாலும் நிர்ணயிக்கப்படும் மொத்த வருமானம் வீழ்ச்சியடைகின்றது. (2 புள்ளிகள்)

agaram.lk

(v)

| | மா.மு | மா.பின் |
|---|---|---|
| (அ) | $a+b$ | $a+b+g+f+e$ |
| (ஆ) | $g+h$ | $b+c+g+h$ |
| (இ) | $-$ | $-(b+c+d+e+f+g)$ |
| (ஈ) | $a+b+g+h$ | $a+b+g+h-d$ |

(4 புள்ளிகள்)

03) (i) உற்பத்திச் செயற்பாடுகளுக்காக நிறுவனமொன்று வெளியிலிருந்து கொள்வனவு செய்த உள்ளிடுகளுக்குச் செலுத்திய பணப் பெறுமதி கணக்கீட்டுச் செலவு. அதாவது நேர்ச் செலவு (2 புள்ளிகள்)
உ+ம்:- மூலப் பொருள் கொள்வனவு

உற்பத்திச் செயற்பாட்டிற்காக நிறுவனமொன்று வெளியிலிருந்து கொள்வனவு செய்த உள்ளீடுகளுக்குச் செலுத்திய பணப் பெறுமதியையும் (நேர்ச்செலவு) அவ் உற்பத்தி நிறுவனம் தனக்குச் சொந்தமான உள்ளீடுகளை உற்பத்திக்குப் பயன்படுத்தியதால் இழக்கப்படும் உத்தம காரணி வருமானம் போன்ற நேரில் செலவையும் சேர்க்க வருவது பொருளியல் செலவு. (2 புள்ளிகள்)

பொருளியல் செலவு = நேர்ச்செலவு + நேரில் செலவு

(ii) உற்பத்தித் தொழிற்பாட்டின் போது வெளியீடானது அதிகரிக்கும் ஆரம்பத்தில் $AVC$ வீழ்ச்சியடைந்து குறைந்த இழிவுப் புள்ளியை நோக்கி வந்தபின் மீண்டும் அதிகரித்துச் செல்லும். (2 புள்ளிகள்)



Scanned with CamScanner

குறைந்து செல்லும் எல்லை விளைவு விதியே அதற்குக் காரணமாகும். (1 புள்ளி)

எல்லை விளைவு அதிகரிக்கும் போது *AVC* வீழ்ச்சியடைவதுடன் எல்லை விளைவு குறையும் போது *AVC* உயர்வடையும் (1 புள்ளி)

(iii) கிடையச்சுக்கு சமாந்தரமான கேள்விக் கோடாக இருக்கும் / முடிவிலி நெகிழ்ச்சியுடைய கேள்விக்கோடாக இருக்கும். (1 புள்ளி)

அதற்கான காரணங்கள், சந்தையில் குறித்த நிறுவனத்தின் பங்கு மிகச் சிறியதாக இருத்தல், ஓரினத் தன்மை வாய்ந்த பொருட்களை நிறுவனங்கள் உற்பத்தி செய்தல், கொள்வனவாளர்கள் சந்தை பற்றிய பூரண அறிவைக் கொண்டுள்ளமை. (3 புள்ளிகள்)

(iv) *AFC*

180

90

60

45

36

(சரியான நான்கு விடைகளுக்கு 04 புள்ளிகள்)

(v) (அ) நிறைபோட்டி

(ஆ) தனியுரிமை

(இ) தனியுரிமைப் போட்டி

(ஈ) சிலருரிமை

(4 புள்ளிகள்)

04) (i) பணவீக்க இடைவெளி என்பது நிறைதொழில்மட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அந்நிறை தொழில் மட்டத்தை அடையத் தேவையான அளவை விட பொருளாதாரத்தின் மொத்தச் செலவீடுகள் கூடுதலாக உள்ள அளவினால் காட்டப்படும். (2 புள்ளிகள்)

பணச்சுருக்க இடைவெளி என்பது நிறைதொழில்மட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதனை அடையத் தேவையான அளவை விட பொருளாதாரத்தின் மொத்தச் செலவீகள் எந்தளவினால் குறைவாக உள்ளது என்பதைக் காட்டும். (2 புள்ளிகள்)

(ii) நிலையான சொத்துக்களை உருவாக்குவதற்கான செலவுகள் நிலையான மூலதனவாக்கத்துக்கான முதலீட்டுச் செலவுகளாகும்.

உ+ம்:- இயந்திர உபகரணம், கட்டிடம், பெருந்தெரு (1 புள்ளி)

குறித்த வருடத்திற்குள்ளே மூலப்பொருள்கள், குறைவேலைப் பொருள்கள் என்பவற்றில் ஏற்பட்ட மாற்றம் இருப்பு மாற்றமாகக் கருதப்படும். (1 புள்ளி)

நிலையான மூலதன ஆக்கம் என்பது நிறுவனம் திட்டமிட்டு மேற்கொள்ளும் முதலீட்டுச் செலவாகும். ஆனால் இருப்பு மாற்றம் எதிர்பாராத முறையில் குறுங்காலத்திற்குள் கேள்வி, நிரம்பல் என்பவற்றுக்கிடையில் ஏற்படும் மாற்றத்தினால் உருவாகின்றது. (1 புள்ளி)

ஏனைய மூலதனப் பொருட்களைப் போல இருப்பும் உற்பத்திச் செயற்பாட்டிற்கு முக்கியமாக உதவுவதால் வணிக நிறுவனத்தின் இருப்பும் முதலீட்டுச் செலவில் ஒரு பகுதியாகக் கருதப்படுகின்றது. (1 புள்ளி)

(iii) (அ) மொத்த முதலீடு = அரச முதலீடு + தனியார் முதலீடு

= 668 + 2236 (1 புள்ளி)

= 2904 மில்லியன் (1 புள்ளி)

agaram.lk



Scanned with CamScanner

(ஆ) உள்நாட்டு சேமிப்பு = தனியார் சேமிப்பு + அரச சேமிப்பு

= 2196 + (−127) (1 புள்ளி)

= 2069 மில்லியன் (1 புள்ளி)

(இ) தேசிய சேமிப்பு = உள்நாட்டு சேமிப்பு + வெளிநாட்டிலிருந்தான காரணி வருமானம் + வெளிநாட்டிலிருந்தான தேறிய நடைமுறைமாற்றல்

= 2069 + (−240) + 813 (1 புள்ளி)

= 2642 மில்லியன் (1 புள்ளி)

(ஈ) முதலீட்டு விகிதம் = $\frac{\text{மொத்த முதலீடு}}{\text{மொ.உ.நா.உற்பத்தி}} \times 100$

= $\frac{2904}{9784} \times 100$ (1 புள்ளி)

= 29.6% (1 புள்ளி)

(iv) பண்புகள் :

- ✶ முறையாக ஆவணப்படுத்தப்படாமை
- ✶ குடும்ப உழைப்பில் தங்கியிருத்தல்
- ✶ வரி செலுத்தல், சமூக பாதுகாப்பு முறைகளுக்கான பங்களிப்புக்களில் இருந்து விடுபட்டு இருத்தல்
- ✶ அரசின் பல்வேறு சட்ட திட்டங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்குவதற்கு விருப்பமின்மை

(ஏதாவது மூன்றிற்கு 2 புள்ளிகள்)

தவிர்ப்பதற்குரிய நடவடிக்கைகள்

- ✶ வரி வீதங்களைக் குறைத்தல்
- ✶ வரி முறையினை சமத்துவம் வாய்ந்ததாக மாற்றுதல்
- ✶ சட்டத்தை நடைமுறைப்படுத்த அதிகவளங்களை பயன்படுத்தல்
- ✶ தண்டனைகளை அதிகரித்தல்

(ஏதாவது மூன்றிற்கு 2 புள்ளிகள்)

agaram.lk

05) (i) நுகர்வு $(C)$

சேமிப்பு $(S)$

தன்னியல்பான வரி $(T)$

அரச செலவு $(G)$

மாற்றல்கள் $(TR)$

முதலீடு I

(4 புள்ளிகள்)

(ii) $\Delta Y = \Delta C + \Delta S$

$Mpc = \frac{\Delta C}{\Delta Y}$

$Mps = \frac{\Delta S}{\Delta Y}$

வருமானத்தில் ஏற்படும் மாற்றம் நுகர்வுக்கும் மிகுதி சேமிப்புக்கும் மட்டும் பயன்படுத்தும் போது $mpc + mps = 1$ ஆக இருக்கும்.

$\frac{\Delta Y}{\Delta Y} = \frac{\Delta C}{\Delta Y} + \frac{\Delta S}{\Delta Y}$

$1 = mpc + mps$

$1 = 0.75 + 0.25$

(4 புள்ளிகள்)



Scanned with CamScanner

(iii) (அ) $C = 300 + 0.9Y$ (1 புள்ளி)

(ஆ) $\Delta Y = K.\Delta I$

$\Delta Y = 10 \times 200$

$\Delta Y = 2000$ (1 புள்ளி)

$\Delta Y = \Delta C + \Delta I$ (1 புள்ளி)

$2000 = \Delta C + 200$

$\Delta C = 1800$ (1 புள்ளி)

(இ) $\frac{-b}{1-b} = \frac{-0.9}{1-0.9}$ (1 புள்ளி)

$-9$ (1 புள்ளி)

(iv) (அ) $Y = C + I + G$

$Y = 0.8yd + 1500 + 2700$

$Y = 0.8(y - 0.1y) + 1500 + 2700$

$Y = 0.8y - 0.08y + 4200$ (1 புள்ளி)

$Y = 0.72y + 4200$

$Y = 0.72y = 4200$

$0.28y = 4200$

$y = 15000$ (1 புள்ளி)

(ஆ) $yd = Y - T$

$yd = 15000 - 0.1 \times 15000$

$= 15000 - 1500$

$= 13500$

$C = 0.8yd$

$C = 0.8 \times 13500$

$C = 10800$

சேமிப்பு $S = yd - C$

$13500 - 10800$

$S = 2700$ (3 புள்ளிகள்)

வேறுபாடு $2700 - 1500$

$= 1200$ (1 புள்ளி)

உப பிரிவு 'ஆ'

06) (i) தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம். இச்சுட்டெண்ணை மொத்த விற்பனை விலைச்சுட்டெண்ணுக்குப் பிரதியீடாகப் பயன்படுத்தலாம். (2 புள்ளிகள்)

(ii) பொது விலைமட்டத்தில் உண்மையாக ஏற்படும் உயர்வு வெளிப்படையான பணவீக்கமாகும். நிரம்பல் அதிர்ச்சி அல்லது நிர்வாகத் தீர்மானத் தாக்கம் அல்லது விலைகளில் ஏற்படும் தற்காலிக உயர்வினால் வெளித்தோற்றப் பணவீக்கம் ஏற்படும். (2 புள்ளிகள்)

அடிப்படைப் பணவீக்கம் என்பது பொதுவிலை மட்டத்தில் ஏற்படும் தற்காலிக மாற்றத்தைச் சரி செய்வதற்காக செம்மை செய்த பணவீக்க வீதமாகும். (2 புள்ளிகள்)

இதில் உணவுப் பொருட்களையும் எரிபொருளையும் அகற்றி அடிப்படைப் பணவீக்க வீதம் கணிக்கப்படுகின்றது. (1 புள்ளி)



agaram.lk
Scanned with CamScanner

(iii) சம்பளமாக அல்லது வாடகையாக அல்லது வட்டியாக அல்லது இலாபப் பங்காக பெற்றுக் கொள்ளப்படும் பண அளவுகளே பணம் அல்லது பெயரளவு வருமானம் ஆகும். (2 புள்ளிகள்)

அப்பணத்தினைக் கொண்டு கொள்வனவு செய்யக்கூடிய பொருட்கள் சேவைகளின் அளவு மெய் வருமானம் ஆகும். (1 புள்ளி)

பெயரளவு வருமானம் விலைமட்ட அதிகரிப்பு வேகத்தை விட வேகமாக அதிகரிக்குமானால் மெய்வருமானம் உயர்வாக இருக்கும். (1 புள்ளி)

(iv)
- மொத்தக் கேள்வி அதிகரிப்பைக் கட்டுப்படுத்தல்
- மொத்த நிரம்பல் அதிகரிப்பு வேகத்தைக் கூட்டுதல்
- அரசின் நேரடித் தலையீடு
- செயற்றிடனுடன் வளங்கள் பகிரப்படுவதிலுள்ள தடைகளை நீக்குதல்

(ஏதாவது மூன்றிற்கு 03 புள்ளிகள்
ஒரு விளக்கம் 02 புள்ளிகள்)

(v)
- பணச்சுற்றோட்ட வேகம் சார்பளவில் நிலையானதாகும்.
- பொருளாதாரம் நிறைதொழில் மட்டத்தில் உள்ளதால் வெளியீட்டின் பௌதீக ரீதியான பருமன் ($Y$ அல்லது $T$) நிலையானதாகும். (2 புள்ளிகள்)

$V$ மற்றும் $y$ அல்லது $T$ ஆகிய மாறிகள் நிலையாக உள்ள போது $M$ மற்றும் $P$ ஆகிய மாறிகளிடையே நேர்விகித சமமானதும் நேர்கணியமானதுமான தொடர்பு காணப்படும். (2 புள்ளிகள்)

07) (i)
- வைப்புக்களை ஏற்றல்
- கடன் வழங்கல் (குறுங்கால, நீண்டகால)
- முகவர் சேவை
- பொதுப் பயன்பாட்டு சேவை
  - வெளிநாட்டு வங்கி நடவடிக்கைகளின் போது உதவுதல்
  - அடகுச் சேவை
  - உண்டியல்
  - வெளிநாட்டு செலாவணிக் கொடுக்கல் வாங்கல் (3 புள்ளிகள்)

agaram.lk

(ii) பணவாக்கம் என்பது ஒவ்வொரு வணிக வங்கியும் தான் திரட்டும் வைப்புக்களில் குறித்த ஓர் சதவீதத்தை ஒதுக்காக வைத்துக் கொண்டு மீதியைக் கடனாக வழங்குவதையும் இவ்வாறு வழங்கப்படும் கடன் கேள்வி வைப்புக்களிடையே பரிமாற்றம் செய்யப்படுவதால் வங்கிக் கட்டமைப்பினுள் உள்வந்த ஆரம்ப வைப்பின் அளவைவிடக் கூடிய பெறுமதியுடைய கொடுக்கல் வாங்கல்களைப் பூர்த்தி செய்யும் ஆற்றலை வழங்கும் கூட்டுச் செயற்பாடாகும். (2 புள்ளிகள்)

**வரையறைகள்**

- பொதுமக்கள் சட்ட முறைப் பணத்தை தம்மிடம் வைத்துக் கொள்வதற்கு கூடுதலாக விருப்பம் தெரிவிக்கும் போது வணிக வங்கிகளின் மிகை ஒதுக்குகள் குறைவடையும்.
- வங்கிகள் மிகை ஒதுக்கினை வைத்திருப்பதற்கு விரும்பும் போது வைப்பாக்கம் குறைவடையும்.
- கடனுக்கான கேள்வி குறைவடைதல்
- மத்திய வங்கியின் பணக்கொள்கையின் கீழ் கடன் விரிவாக்கம் தொடர்பாக விதிக்கப்படும் எல்லைகள் (2 புள்ளிகள்)

(iii) உயர்வலுப் பணத்தை அடிப்படையாகக் கொண்டே மிகப் பெரிய அளவிலான பணச் சொத்துக் கையிருப்புக்கள் உருவாக்கப்படுகின்றன. நாட்டின் பண நிரம்பலைத் தீர்மானிப்பதில் உயர்வலுப்பணம் முக்கியமானதாகும். பண நிரம்பலானது எப்போதும் உயர்வலுப் பணத்தின் பெருக்கமாகவே காணப்படும். $M = mH$ (2 புள்ளிகள்)



Scanned with CamScanner

(iv) (அ) $264 + 75 + 148 = 478\ MR$ (2 புள்ளிகள்)

(ஆ) $264 + 220 = 484\ MR$ (2 புள்ளிகள்)

(இ) $484 + 2574 = 3058\ MR$ (2 புள்ளிகள்)

(ஈ) $3058 + 359 = 3417\ MR$ (2 புள்ளிகள்)

(உ) $\frac{3417}{478} = 7.1$ (2 புள்ளிகள்)

(சரியான சமன்பாடு அல்லது பதிவுக்கு 1 புள்ளி
விடைக்கு 1 புள்ளி)

08) (i) நட்ட ஈடு வழங்கல்
உள்வாங்கச் செய்தல்
பங்கீட்டு நடவடிக்கைகள்
உரிமைப்பத்திரக் கட்டணம் அறவிடல்
தண்டம் விதித்தல்
சட்டங்களை விதித்தல் (ஏதாவது நான்கு விடயத்திற்கு 4 புள்ளிகள்)

(ii) நுகர்வில் நேர்கணிய வெளிவாரி விளைவுகளை உருவாக்கும் பண்டங்கள் மேன்மைப் பண்டங்களாகும். உ+ம்:-கல்வி, சுகாதாரம், நோய்த்தடுப்பு மருந்தேற்றல் (2 புள்ளிகள்)

வேறுபாடு :-

- நேர் வெளிவாரி விளைவு காரணமாக மேன்மைப் பண்ட நுகர்வின் போது உருவாகும் சமூக நலன் தனியார் நலனை விடப் பெரிதாகும். தனியார் பண்ட நுகர்வின் போது வெளிவாரி நலன் உருவாகுவதில்லை. தனியார் பண்டத்தை நுகர்ந்த போது நுகர்ந்தவருக்கு மட்டுமே நலன் கிடைக்கின்றது. (2 புள்ளிகள்)

(iii)
- பொருள்கள் சேவைகளுக்கான செலவு
- வட்டிக் கொடுப்பனவு
- நடைமுறை மாற்றல்களும் உதவு தொகைகளும் (3 புள்ளிகள்)

(iv) உற்பத்தியாளர் மீது விதிக்கப்படும் வரி கொள்வனவாளருக்கு மாற்றப்படுதல் வரிச்சுமையை முன்னோக்கிப் பெயரச் செய்தல் ஆகும்.

உற்பத்தியாளர் மீது விதிக்கப்படும் வரிச்சுமையைக் காரணி வழங்குநர் மீது பெயரச் செய்தல் வரிச்சுமையைப் பின்னோக்கிப் பெயரச் செய்தல் ஆகும். (4 புள்ளிகள்)

(v) 1. பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காகப் பின்பற்றப்பட்ட கொள்கைகள்
   - ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதற்காக வரிகள் குறைக்கப்பட்டமை
   - நேரடி வெளிநாட்டு முதலீடுகளைக் கவருவதற்காக வரி விலக்குகள்
   - வரித் தளத்தினை அதிகரிக்காமல் வரி வீதங்கள் குறைக்கப்பட்டமை
2. அரசாங்கத்தின் குறுகியகால காசுப்பாய்ச்சல் தேவைப்பாடுகளால் வரி செலுத்துவோரிடையே நிச்சயமற்ற தன்மையை ஏற்படுத்துகின்றமை
3. முறைசாராப் பொருளாதாரமும் வரி ஏய்ப்பு மற்றும் வரித்தவிர்ப்பு
4. நிருவாக வினைத்திறனின்மை
5. வரி செலுத்துவது தொடர்பில் கம்பனி மற்றும் பொதுமக்களின் மனோபாவம்
6. கணனி வழி அதே நேரக் கொள்வனவுகள் (5 விடயங்களுக்கு 5 புள்ளிகள்)

09) (i) ஏதாவதொரு நாடு தமது வர்த்தகப் பங்காளி உற்பத்தி செய்வதை விடக் குறைந்த வளத்தைக் கொண்டு ஏதாவது ஒரு பண்டத்தை உற்பத்தி செய்ய முடியுமாயின் அப்பண்டத்தை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதனால் அவ்வாறில்லாத ஏனைய பண்டங்களை இறக்குமதி செய்து நன்மைகளைப் பெறமுடியும் என்பது முழு நன்மைக் கோட்பாடாகும். (2 புள்ளிகள்)



agaram.lk
Scanned with CamScanner

இது உற்பத்தியில் வினைத்திறனை அடிப்படையாகக் கொண்டது. (1 புள்ளி)

ஏதாவதொரு நாடு தனது வர்த்தகப் பங்காளி உற்பத்தி செய்வதைவிட அதிகமான வளத்தைப் பயன்படுத்தி ஏதாவதொரு பண்டத்தை உற்பத்தி செய்வாராயினும் வர்த்தகப் பங்காளி உற்பத்தி செய்வதைவிடக் குறைந்த அமையச் செலவில் அதனை உற்பத்தி செய்ய முடியுமாயின் அப்பண்டத்தை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதன் மூலம் நன்மைகளைப் பெற முடியும் என்பது ஒப்பீட்டு நன்மையாகும். (2 புள்ளிகள்)

(ii)

| நன்மைகள் | தீமைகள் |
| --- | --- |
| 1. வெளிநாட்டுப் போட்டியாளர்களிடமிருந்து உள்நாட்டு குழந்தைப் பருவ உற்பத்திகளைப் பாதுகாத்தல் | உள்நாட்டு வெளிநாட்டு சந்தைகள் ஒடுக்கமடைதல் |
| 2. தன்னிறைவை ஏற்படுத்தல் | வெளிநாட்டு வர்த்தகம் ஒடுக்கமடைந்து தேசிய வருமானம் குறைவடைதல் |
| 3. வேலையின்மையைக் குறைப்பதற்கு | உள்நாட்டு உற்பத்திச் செலவுகளைக் குறைப்பதற்கு ஊக்குவிப்பின்மையால் வினைத்திறனற்ற தொழில் உருவாதல் |
| | தரமான பண்டங்களின் உற்பத்தி குறைதல் |
| 4. குவித்தலை தடை செய்தல் | |
| 5. சென்மதி நிலுவைப் பாதகத் தன்மையை நீக்குதல் | |

(5 புள்ளிகள்)

(iii) இறக்குமதிப் பண்டங்களின் விலை உயர்வின் சதவீதத்தால் உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்குக் கிடைக்கும் பாதுகாப்பு பெயரளவுப் பாதுகாப்பு வீதமாகும்.

பெயரளவு இறக்குமதித் தீர்வைப் பாதுகாப்பு உள்நாட்டுப் பண்டங்களுக்குக் கிடைக்கும் உண்மையான பாதுகாப்பைக் காட்டுவதில்லை.

agaram.lk

இறக்குமதி உள்ளீடுகள் மீது அறவிடப்படும் தீர்வையால் உள்நாட்டு உற்பத்திகளுக்குக் கிடைக்கும் பாதுகாப்புக் குறைவடையும்.

இதனால் இறுதிப் பொருள்களின் மீதான தீர்வைகளுக்கு மேலதிகமாக உள்ளீடுகள் மீது விதிக்கப்படும் தீர்வைகளும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

பயனுறுதி வாய்ந்த பாதுகாப்பு வீதம் என்பது சர்வதேச வர்த்தகப் பாதுகாப்பின் போது இறக்குமதித் தீர்வை விதிக்கப்பட்டதால் உள்நாட்டு உற்பத்தியாளருக்குக் கிடைக்கும் உண்மையான பாதுகாப்பு வீதியாகும்.

பயனுறுதி வாய்ந்த பாதுகாப்பு வீதம் $= \dfrac{\text{தீர்வையின் கீழ் கூட்டிய பெறுமதி} - \text{தாராள வர்த்தகத்தின் கீழ் கூட்டிய பெறுமதி}}{\text{தாராள வர்த்தகத்தின் கீழ் கூட்டிய பெறுமதி}} \times 100$

(5 புள்ளிகள்)

(iv) நடைமுறைக் கணக்கு

- பொருட்கள்
- பணிகள்
- முதலாந்தர வருமானம்
- இரண்டாந்தர வருமானம்

(5 புள்ளிகள்)

மூலதனக் கணக்கு



Scanned with CamScanner

10) (i) பொருளாதாரமொன்றில் பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்யும் இயலளவில் ஏற்படும் ஓர் அதிகரிப்பே பொருளாதார வளர்ச்சியாகும்.

அதாவது நாடொன்றின் மெய்த்தேசிய உற்பத்தியில் அல்லது சாத்திய வெளியீட்டில் ஏற்படும் தொடர்ச்சியான அதிகரிப்பே பொருளாதார வளர்ச்சியாகும். (3 புள்ளிகள்)

(ii) நீண்டகாலப் பொருளாதார வளர்ச்சி ஏற்படும் போது விவசாயம், கைத்தொழில், சேவைத்துறையின் பங்களிப்பில் ஏற்படும் மாற்றங்களை விபரிப்பது பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றமாகும். பொருளாதார வளர்ச்சி ஏற்படும் போது விவசாயத் துறையின் பங்கு குறைந்து கைத்தொழில் சேவைத் துறைகளின் பங்களிப்பு அதிகரிக்கும். (3 புள்ளிகள்)

காரணம்

1. விவசாய உற்பத்தியின் வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சியற்றது.
2. கைத்தொழில் சேவைத்துறை உற்பத்திகளின் வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சி யுடைதாகவும் இருத்தல் (2 புள்ளிகள்)

(iii) பொருளாதார வளர்ச்சியானது

- வேலையின்மையைக் குறைத்தல் வேண்டும்.
- நாட்டின் வறுமை நிலையைக் குறைத்தல் வேண்டும்.
- நியாயத்துவத்தை ஏற்படுத்தல் வேண்டும்.
- சமமான பிராந்திய வளர்ச்சி
- சமூக பொருளாதார உட்கட்டமைப்பு வசதி விருத்தி
- அரச சேவைகளை சகலரும் பெறல்
- சூழல் பாதுகாப்பு
- நல்லாட்சி

என்பவற்றை ஏற்படுத்தும் போதே வாழ்க்கைத் தரத்தைப் பிரதிபலிக்கும்.

(ஏதாவது நான்கு விடயங்களுக்கு 4 புள்ளிகள்)

(iv) பொருளாதார அபிவிருத்தி, சமூக அபிவிருத்தி, சூழல் பாதுகாப்பு என்பவற்றினூடாகப் பெற்றுக் கொள்ளப்படும் முன்னேற்றமே நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தியாகும். (2 புள்ளிகள்)

காரணங்கள்

- சூழல் பாதுகாப்பை ஏற்படுத்தல்
- இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் (2 புள்ளிகள்)

(v) பணவீக்க அழுத்தத்தைத் தூண்டாமல் பெறக்கூடிய நீடித்திருக்கக்கூடிய உச்ச வெளியீடே சாத்திய வெளியீடாகும். அது ஒரு பொருளாதார உற்பத்தி செய்யக்கூடிய முழு உச்ச வெளியீடன்று. (2 புள்ளிகள்)

பொருளாதாரம் குறுங்காலத்தில் சாத்திய வள வெளியீட்டிற்கு மேற்பட்ட மட்டங்களில் இயங்கலாம். அது உச்ச வெளியீடாகும். தொழிற்சாலைகளும் தொழிலாளர்களும் மேலதிக நேரம் இயங்கி அத்தகைய வெளியீட்டை உற்பத்தி செய்யலாம். இது நிலைத்திருக்க முடியாது. (2 புள்ளிகள்)

agaram.lk



Scanned with CamScanner